22nd February 1969]

வழக்கு 12—7—1968-ல் கைவிடப்பட்டது, பயணப்பட்டி எழுதி வைக்காமைக்காக, லாரியின் வலவர்களுக்கு ஐயங்கொண்டம் துணை மாஜிஸ்திரேட் அபராதம் விதித்தார்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சென்ற இரண்டாண்டுகளாக லாரி உரிமையாளர்களின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கூறி வந்திருக்கிறேன். அப்படி நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம்? ஏதாவது சட்ட சிக்கல் இருக்கிறதா? அப்படியிருந்தால் புதிய சட்டம் கொண்டு வந்தால் என்ன? இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : லாரிகளில் தவறான முறையில் எடுத்துச் செல்பவர்கள், லாரியின் முதலாளிகள், தண்டிக்கப்படுகிறார்கள். லாரியை ஓட்டுபவர்களும் தண்டனைக்கு ஆளாகிறார்கள். இந்த நிலையில் டிரிப் ஷீட் எழுதாததற்காக ஒவ்வொரு டிரைவருக்கும் பத்து ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

திரு . டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, இதைக் கொண்டு மாட்டு வண்டிகளில் செல்லும் நெல்லைக் கைப்பற்றும் போது அரசாங்கக்கணக்கில் அவை கொண்டு வரப்படுகின்றனவா இல்லையா என்று தெரியாமல் போவதால், அப்படி வரும் நெல் பற்றிய கணக்கை மாதந்தோறும் கூடும் டெவலப்மெண்ட் கவுன்சிலில் அறிக்கையாக வைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்கள் எங்கே மாட்டு வண்டியில் போனதைப் பிடித்தார்கள் என்று விபரம் கொடுத்தால் அந்தக் கணக்கு சேர்க்கப்பட்டிருக்கிறதா, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று விசாரித்து சொல்ல முடியும்.

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாட்டுவண்டி போவதைத் தேடிப்பிடிப்பதும், விபரம் கொடுப்பதும், பெட்டிஷன் போடுவதும் இயலாத காரியம். இப்படிப்பட்ட கேள்விக்குறி இருக்கிறது என்றாலே தவறாக கொண்டு போகிறவர்கள் திருந்துவார்கள் என்பதால், அந்தமாதிரி அறிக்கையை வெளியிட அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: வண்டியாக இருந்தாலும் காராக இருந்தாலும் ஒரே தண்டனைதான். மாட்டு வண்டிக்கு வேறு, லாரிக்கு வேறு என்பதல்ல. எல்லாவற்றிற்கும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

Water-supply Scheme, Dharmapuri

* 22 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the present stage of the Dharmapuri Water-supply Scheme?

[22nd February 1969

தருமபுரி குடி தண்ணீர் திட்டம்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு சுகாதார-அரிஜன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தருமபுரி குடி தண்ணீர் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இத்திட்டத்திற் கான புலனாய்வு வேலைகள் நடந்துகொண்டு இருக்கின்றன.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, தர்மபுரி புதிதாக ஒரு மாவட்டத்தின் தலைநகராக ஆக்கப்பட்டது. அதனால் தண்ணீர் தேவை அதிகமாக இருக்கிறது என்று எனக்கு வந்த கடிதத்தில் கூறியிருக்கிறார்கள். ஆகவே சீக்கிரமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சீக்கிரம் செய்ய வேண்டுமென்று தான் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இது வரையில் நடைபெற்ற புலனாய்வுகளில் பெண்ணையாறு, காவேரி போன்ற ஆறுகளில் இருமத்தூர் பகுதியில் கிடைக்கும் தண்ணீர் குடிப்பதற்குத் தகுதியற்றதாக பரீட்சைக்குப் பிறகு தெரிந்து அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. ஜெயலத்தாறு பக்கத்தில் பாலக்கோடு பகுதியில் தண்ணீர் எடுத்தால் 356 ஏக்கர் நஞ்சை நிலத்தை அதற்காக எடுக்கவேண்டியிருப்பதால் அது இப்போ திருக்கிற உணவுத் தட்டுப்பாடுக்கு உகந்ததல்ல என்று அந்தத் திட்டமும் கைவிடப்பட்டது. இப்போது அடுத்து ஒக்க னக்கல் வீழ்ச்சிக்கு அருகில் இருக்கும் காவேரி தண்ணீரை எடுக்கும் முயற்சியிருக்கிறது. சின்னாறு பக்கத்தில் உள்ள தண் ணீரையும் எடுக்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

Aided Secondary School Teachers

* 23 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of Thiru M. Rajah Iyer): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Inspectress of Girls' Schools, Tirunelveli has denied the increment due to any teacher, who changed over from one Aided Secondary School to another without any break of service; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Music teachers

* 24 Q.—THIRU G. KRISHNAMOORTHY: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of posts of Music Teachers abolished in Aided Girls' High Schools in Tiruchirappalli Town area from the commencement of the school year 1967–68;